இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (26.03.2025) திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு -73க்குட்பட்ட பெரம்பூர் பேரக்ஸ் கேட் சாலையில் "மீண்டும் மஞ்சப்பை திட்டத்தின் கீழ் தானியங்கி துணிப்பை விற்பனை இயந்திரத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர். பிரியா, தாயகம் கவி எம்.எல்.ஏ., மாமன்ற உறுப்பினர் அம்பேத் வளவன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (26.03.2025) சென்னையில் "உலக காசநோய் தினம் 2025 நிகழ்ச்சியில் 100 நாட்கள் காசநோய் இல்லா தமிழ்நாடு தொடர் பிரச்சாரம் நடைபெற்று முடிந்த நிலையில் தமிழ்நாடு அதிக பரிசோதனை செய்ததற்காக ஒன்றிய அரசின் விருதினை 24.03.2025 அன்று பெற்றது. அந்த விருதினை அமைச்சரிடம் தேசிய நலவாழ்வு குழு இயக்குநர் மரு. அருண் தம்புராஜ், காண்பித்து வாழ்த்து பெற்றார்கள். இந்நிகழ்வில் ஜெயச்சந்திர பானு ரெட்டி, மரு.ஜெ.சங்குமணி, மரு.ராஜமூர்த்தி, எம். எஸ்.சுவாமிநாதன், மரு.சௌமியா சுவாமிநாதன், மரு.நளினி கிருஷ்ணன், நடிகை சுஹாசினி, மரு.ஜெகதீசன், மரு.ஆஷா ஃபிரடெரிக் மற்றும் மருத்துவர்கள், நிர்வாகிகள் உடனிருந்தனர்.

கோடைக் காலங்களில்

தொற்று நோய் பரவாமல் தடுக்க நடவடிக்கைகள்!

சட்டப்பேரவையில் – சிறப்பு கவன ஈர்ப்பில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, மார்ச்.27-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (25.03.2025) சட்டப்பேரவையில் "அரசுப் பொது மருத்துவமனைகளில் கோடைக் காலங்களில் ஏற்படும் நோய்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை இருப்பு வைக்க வேண்டியது" தொடர்பான கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது ஆற்றிய உரை:-

பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை, பிறதுறைகளுடன் ஒருங்கிணைந்து கொள்ளை நோய் மற்றும் தொற்று நோய்கள் பரவுதலை கண்காணிக்கவும், நோய் பரவலை தடுக்கவும் மற்றும் கோடை காலங்களில் ஏற்படும் நீரிழப்பு, வெப்பம் சார்ந்த நோய்கள்/வெப்ப வாதம் (Heat Stroke) தோல் நோய்கள், கண் அழற்சி (Conjunctivitis) வைரஸ் கிருமிகளால் ஏற்படும் அம்மை நோய், நீரினால் பரவக்கூடிய வயிற்றுப் போக்கு உள்ளிட்ட நோய்கள், பூச்சிகளால் பரவக்கூடிய டெங்கு, சிக்கன்குனியா போன்ற நோய்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதிலும், உரிய சிகிச்சை அளித்திடும் வகையிலும், திறம்பட செயல்பட்டு வருகின்றது. நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்த, மாவட்ட அளவில், மாவட்ட நல அலுவலர்கள் (DHOs) கண்காணிப்பு அலுவலர்களாக செயல்படுகின்றனர்.

கோடை காலங்களில் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

● முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ஆண்டுதோறும் கோடை காலங்களில், பொதுமக்கள் வெப்ப தாக்கத்திலிருந்து காத்துக் கொள்ளும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்டந்தோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

● மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மற்றும் தலைமைச் செயலாளர் ஆகியோர் தலைமையில் ஆண்டுதோறும் மாநில அளவிலான கொள்ளை நோய் தடுப்பு மற்றும் பல்துறை ஒருங்கிணைப்பு கூட்டங்கள் சீரிய முறையில் நடைபெற்று வருகின்றன.

● நடமாடும் மருத்துவக் குழுக்கள் (MMU) மாதந்திர முன் பயணத் திட்டத்தின்படி நாள்தோறும் கிராமங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தி உரிய மருந்துகள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

● தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்தின் (TNMSC) மூலம், 38 மாவட்டங்களுக்கும் தேவையான கொள்ளை நோய் தடுப்பு மற்றும் சிகிச்சைகள் 25 சிறப்பு மருந்து மாத்திரைகள் ரூ.3.29 கோடி செலவில் 2024-25 ஆண்டில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

● அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் 17.03.2025 அன்று இருப்பில் உள்ள அத்தியாவசிய கொள்ளை நோய் தடுப்பு மருந்துகளின் இருப்பு விவரம் மருந்துகளின் பட்டியலை புள்ளி விவரங்களுடன் அறிவித்தார். அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் உள்ள மருந்துகளின் இருப்பு விவரங்கள், தினந்தோறும் மருந்து விநியோக மேலாண்மை அமைப்பு (DDMS) மென்பொருளின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலான மருந்துகள் பற்றாக்குறை ஏற்படாமல் உடனுக்குடன் மருந்து பண்டகசாலை (TNMSC Ware House) மூலம் மாநிலம் முழுவதும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

● அனைத்து மாவட்ட நல அலுவலர்களுக்கும், வாரந்தோறும் காணொளி காட்சி வாயிலாக ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் மாதந்தோறும் நடைபெறும் மாநில அளவிலான ஆய்வுக் கூட்டங்களிலும் கோடை கால நோய்கள் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி விரிவாக விவாதிக்கப்படுகின்றது.

● ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டம் (DSP): நோய்க்கான கண்காணிப்பு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துவதில் ஒருங்கிணைந்த நோய் கண்காணிப்பு திட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. இத்தளத்தின்மூலம் இணையம் வாயிலாக அனைத்து வித மான தொற்று நோய்கள் குறிப்பாக அனைத்து வித மான காய்ச்சல் பற்றிய தரவுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

● நீர்ப்பகுப்பாய்வகங்கள் மூலம் நீரின் பரிசோதனைகள்: நீர் நிலைகளிலிருந்து நீர் மாதிரிகளை சேகரித்து, நீர் நிலைகளிலிருந்தும், கிணறுகள், மேல்நிலை தொட்டிகள், சுத்திகரிப்பு நிலையங்கள், நீர் பகிர்மான இடங்கள், நீர் தேக்கங்களிலிருந்தும் நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு நீர் மாதிரிகளின் இயற்பியல், வேதியியல் மற்றும் நுண்ணுயிரியல் தன்மை குறித்து ஆய்வுகள் நோய் தடுப்பு நடவடிக்கைக்காக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வெப்ப அலையை தடுப்பதற்கு சுகாதார நிலையங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் தயார் நிலை

● தேசிய பருவநிலை மாற்றம் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கான (IHIP-NPCCHH) இணையதளம், வெப்பம் தொடர்பான நோய்களை நிகழ்நேர அடிப்படையில் கண்காணிக்கப் பயன்படுகிறது.

● போதுமான அளவு உப்பு சர்க்கரை கரைசல் (ORS) பொட்டலங்கள், அத்தியாவசிய மருந்துகளான சிரைவழி செலுத்தும் திரவங்கள் மற்றும் நீர்ச்சத்து குறைவை நிர்வகிப்பதற்கான உபகரணங்களை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

● ஆரம்ப சுகாதார நிலையம், அரசு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் இரண்டு முதல் பத்து படுக்கைகள் வரை ஒதுக்கப்பட்டு வெப்பத்தாக்கம் மற்றும் வெப்ப வாத நோய்க்கான சிகிச்சை அளிக்க சிறப்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

● வெப்ப அலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிப்பதற்கு 108 அவசர ஊர்திகளில் தேவையான வசதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளது.

● வெப்ப அலையின் தீவிர தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களை சிகிச்சை அளிப்பதற்கான உரிய நெறிமுறைகள் (SOP) வழங்கப்பட்டுள்ளது.

● கடந்த ஆண்டு கோடைகாலத்தின்போது வெப்பம் தொடர்பான நோய்களை கட்டுப்படுத்த பேருந்து நிலையங்கள், சந்தைகள், இரயில் நிலையங்கள் மற்றும் மக்கள் கூடும் பொது இடங்களில், உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து 1410 தண்ணீர் பந்தல்களில், 6,95,804 உப்பு நீர் கரைசல் (ORS) பொட்டலங்கள் தமிழ்நாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டது.

● தொற்று நோய்கள் குறித்த தடுப்பு நடவடிக்கைகள், அறிகுறிகள், பரவும் முறைகள் மற்றும் தேவையான முன்னெச்சரிக்கைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த விரிவான தகவல், நலக்கல்வி மற்றும் தொடர்பு (IEC) நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

● பருவநிலை மாற்றம் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கான மாநில செயல் திட்டம் (SAPCCHH) தமிழகத்தில் பருவநிலை மாற்றம் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கான மாநில செயல் திட்டம் அக்டோபர் 29, 2024 அன்று வெளியிடப்பட்டது. 38 மாவட்ட அளவிலான பருவநிலை மாற்ற பாதிப்புகளை மதிப்பிட, பருவநிலை மாற்றம் மற்றும் மனித ஆரோக்கியம் குறித்த மாவட்ட செயல் திட்டத்தை (DAPCCHH) தேசிய நோய் கட்டுப்பாட்டு மையத்திற்கு (NCDC NPCCHH) மதிப்பாய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

● 24 மணி நேர கொள்ளை நோய் தடுப்பு கட்டுப்பாட்டு மையம், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து துறை இயக்குநரகத்தில் கொள்ளை நோய் தடுப்பு கட்டுப்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. தொலைபேசி எண் 9444340496, 8754448477 மேலும் 104 என்ற தொலைபேசி எண் மூலமாகவும் பொதுமக்கள் தங்கள் சந்தேகங்கள் குறித்து தெளிவு பெறலாம். இந்த கட்டுப்பாட்டு மையம் செய்திகள், ஊடகங்கள், பொதுமக்கள் வாயிலாக பெறப்படும் நோய் பரவல் குறித்த செய்திகளை ஒருங்கிணைக்கும் தொடர்பு மையமாக செயல்பட்டு, சேகரிக்கப்பட்ட விவரங்களை தொடர்பு டைய மாநில/மாவட்ட அளவிலான அதிகாரிகளுக்கு உடனடியாக தெரிவித்து நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகிறது.

கொள்ளை நோய் தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான 25 வகை சிறப்பு மருந்து மாத்திரைகள் அதன் பெயர்களை அறிவித்தார்.

கோடைக்காலங்களில் ஏற்படும் நீரிழப்பு, கடும் வெப்பம், வெப்ப அலை சார்ந்த நோய்களாக வெப்ப வாதம், தோல் நோய்கள், கண் அழற்சி, வைரஸ் கிருமிகளால் ஏற்படும் சின்னம்மை நோய், தட்டம்மை, நீர் மாசுபடுவதால் ஏற்படும் வயிற்றுப்போக்கு, டைபாய்டு, மஞ்சள் காமாலை உள்ளிட்ட நோய்கள் நீர்த் தேக்கி வைப்பதால் ஏற்படும் நோய்கள் மற்றும் ஏடிஸ் கொசுக்களால் ஏற்படுகின்ற டெங்கு, சிக்கன்குனியா போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றன.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து, கோடைக் காலங்களில் ஏற்படக்கூடிய மேற்குறிப்பிடப்பட்ட நோய்களைக் கட்டுப்படுத்துவதில், அவற்றிற்குரிய உரிய சிகிச்சை அளித்திடும்வகையில், சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் மாநில அளவிலான தொற்று நோய்கள் மற்றும் கொசுக்களால் ஏற்படக்கூடிய டெங்கு மற்றும் சிக்கன்குனியா போன்ற நோய்களை தடுப்பது பல்துறை ஒருங்கிணைப்புக் கூட்டங்கள், inter - departmental co-ordination meetings சீரிய முறையில் நடைபெற்று வருகின்றன. நடமாடும் மருத்துவக் குழுக்களின் மூலம் மாதாந்திர முன்பயண திட்டத்தின்படி, நாள்தோறும் கிராமங்களில், மருத்துவ முகாம்கள் நடத்தி உரிய மருந்துகள் அளிப்பது மற்றும் பொதுமக்களிடையே கோடை காலங்களில் ஏற்படுகிற நோய்கள் மற்றும் கடும் வெப்பம் சார்ந்த நோய்கள் குறித்து விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது சம்மந்தமாக, விவர அறிக்கையில், மிகப் பெரிய அளவிலான பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பது குறித்து குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், உறுப்பினர் சித்த மருத்துவத்தையும் இதில் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவருடைய ஆலோசனையையும் ஏற்று, கோடை வெப்பத்திலிருந்து மக்களைக் காப்பதற்கு சித்த மருத்துவமும் பயன்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் வேறு எப்போதும் இல்லாத அளவில் கடந்த 4 ஆண்டுகளாக ஒவ்வொரு கோடை வெப்ப காலத்திலும், விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சிறந்த மருத்துவத்தை உண்டாக்குதல், மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்தவகையில் இந்தாண்டும் கோடை வெப்பத்திலிருந்து தமிழக மக்களைக் காப்பதற்கு உரிய கவனத்துடன் இந்த அரசு செயல்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது உரையாற்றினார்கள்.

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 51வது வட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் மற்றும் கழக அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. க.கோவிந்தராஜ் தலைமை வகித்தார்.ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, இரா.செந்தில்குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் ஊடகவியாளர் இந்திரகுமார், மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆகியோர் சிறப்புரையாற்றி நலஉதவிகள் வழங்கினர்.உடன் பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, கே.மதன், ப. சோமசுந்தரமூர்த்தி, செந்தில்குமார், கலைச்செல்வம், என்.கிருஷ்ணன், டி.கவியரசு, எம்.வல்லோராஜ், ஜி. அருண்குமார், எம்.சண்முகம், ஆர்.ராஜ்குமார், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.ஜி.உமாபதி நன்றி கூறினார்.

மீஞ்சூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் பொதுக்கூட்டம்:

தமிழ்நாட்டு மக்களுக்காக அல்லும் பகலும் உழைக்கும் ஒரே கட்சி தி.மு.க. தான் !

மாவட்டப் பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் பேச்சு!

திருவள்ளூர், மார்ச் 27-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் கழகத் தலைவர் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆ.ராஜா , வல்லூர் பா.து தமிழரசன், எம்.டி.ஜி. கதிர்வேல், கு. தசரதன், ஆர்.தாஸ். பாளையம், மோகனசுந்தர், ரவிச்சந்திரன், செல்வமணி ,இந்திரா சங்கர், கோபி, பிரபாகரன், ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள் மாவட்ட கழக நிர்வாகிகள் மு.பகலவன், ஜெ. மூர்த்தி , மு.கதிரவன், கே.வி.ஜி.உமா மகேஸ்வரி , கே.சுப்பிரமணி, கே.பரிமளம், பா.செ.குணசேகரன், வெங்கடாசலபதி, க.சு.ஜெகதீசன், முரளிதரன், ரவிக்குமார் , தமிழ் உதயன், ருக்மணி மோகன்ராஜ் ஆகியோர் முன்னிலை இந்நிகழ்ச்சியில்

மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் தலைமை தாங்கி சிறப்புரையாற்றி பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

அப்போது பேசிய அவர் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தமிழ்நாட்டு மக்களுக்காக அல்லும் பகலும் உழைக்கும் ஒரே கட்சி திமுக தான்

தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நலத்திட்ட உதவிகள் செய்து கொண்டிருக்கிறார் குறிப்பாக பெண்களுக்கு இலவச பேருந்து சேவை உரிமைத் தொகை படிக்கும் பெண்களுக்கு அரசு தொகை, என பல்வேறு திட்டங்கள் செய்து கொண்டிருக்கிறது

குறிப்பாக இந்தியாவிலேயே பல்வேறு மாநில அரசுகள் இருந்தாலும் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து அதனை சிறப்பாக செயல்படுத்தி அதனை நிறைவேற்றி தருவதில் நம்பர் ஒன் முதல்வராக திகழ்ந்து கொண்டிருக்கிறார் என தெரிவித்தார்

நிகழ்ச்சி முன்னதாக தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என ஒரே இலக்கு உறுதிமொழி ஏற்றினார்கள்

இக்கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் சைதை சாதிக் , மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் சி.எச்.சேகர், வர்த்தக அணி துணைச் செயலாளர் கே.ஜி. பாஸ்கர்சுந்தரம், கொள்கை பரப்பு துணைச்செயலாளர் வெ.அன்புவாணன், அயலகம் துணைச் செயலாளர் ஜி ஸ்டாலின், ஒன்றிய செயலாளர்கள் டி.கே. சந்திரசேகர், ஆ.சக்திவேல், ஜான் பொன்னுசாமி, மற்றும் வெற்றி(எ) ராஜேஷ், முகமது அலிவி, சம்பத்குமார், தேசராணி தேசப்பன், மற்றும் கழக நிர்வாகிகள் கிளைக் கழகச் செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை மெட்ரோ ரயில் பணி:

மண்டலம் 9,10,13 பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் நிறுத்தம்!

சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை.மார்ச்.27-

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம்(CMRL) தேனாம்பேட்டை மண்டலம். நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலை மற்றும் ஸ்டெர்லிங் சாலையில் பிரதான குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் மேற்கொள்வதால் 29.03.2025 அன்று காலை 10.00 மணி முதல் 30.03.2025 அன்று காலை 10.00 மணி வரை (24 மணி நேரம்) வள்ளுவர்கோட்டம் குடிநீர் பகிர்மான நிலையம், தென் சென்னை குடிநீர் பகிர்மான நிலையம் மற்றும் கீழ்ப்பாக்கம் (TM7 & TM8) குடிநீர் பகிர்மான நிலையங்களின் செயல்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படும். ஆகையால்மண்டலம்-9(தேனாம்பேட்டை). மண்டலம்-10 (கோடம்பாக்கம்) மற்றும் மண்டலம்-13 (அடையாறு)-க்குட்பட்ட கீழ்கண்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மண்டலம் - பகுதிகள் - மண்டலம்-9. (தேனாம்பேட்டை). சூளைமேடு. நுங்கம்பாக்கம். ஆயிரம் விளக்கு. கோடம்பாக்கம் (பகுதி). தி.நகர் (பகுதி). கோபாலபுரம். தேனாம்பேட்டை. ஆழ்வார் பேட்டை. மயிலாப்பூர் (பகுதி). மண்டலம்-10 (கோடம்பாக்கம்). கோடம்பாக்கம். தி.நகர் (பகுதி). மேற்கு மாம்பலம். அசோக் நகர். கே.கே நகர். சைதாப்பேட்டை மண்டலம்-13 (அடையாறு). சைதாப்பேட்டை (பகுதி).

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெருநடைகளுக்குலாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்.4,49வது வார்டு முத்துரங்கம் முதலி தெரு வசந்தபவன் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் பயணிகளின் பயன்பாட்டிற்காக புதியதாக 6,00,000 SBM திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் கழிவறையை 4 வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அதை தொடர்ந்து பிருந்தாவன் அவன்யூவிலும் நடைபெற்று வரும் கால்வாய் பணிகளையும் ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகராட்சியின் உதவி செயற்பொறியாளர் வி.தங்கத்துரை. கழக தோழர்களும் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் உடனிருந்தனர் .

மாதவரம் சட்டமன்றத் தொகுதி வட பெரும்பாக்கம் விநாயகபுரம் பகுதியில் வசிக்கக்கூடிய சுமார் 80 குடும்பங்கள் பல ஆண்டுகளாக பட்டா இல்லாமல் உள்ளனர். தற்பொழுது தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு உரியவ நிபந்தனைகளின் படி பட்டா வழங்க ஏற்பாடு செய்வதை அறிந்து, மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாதவரம் வட்டாட்சியர் ஆகியோர் அறிவுறுத்தலின்படி, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் விநாயகபுரம் பகுதி மக்கள் வடபெரும்பாக்கம் கிராம நிர்வாக அலுவலர் லெனின் அவர்களிடம் பட்டாவிற்கான விண்ணப்ப மனுவை வழங்கினார்கள். உடன் கமலநாதன், கோவிந்தன்,மணி, முகேஷ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.